# ஹொரவப்பொத்தானை பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹொரவப்பொத்தானை பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 04 | - | 2,804 | - |
| | -மேற்படி- | 01 | - | - | 300 |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 03 | 611 | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 677 | - | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | 34 | - | - |
| | -மேற்படி- | 01 | - | - | 217 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,329,329 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,778,327 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 10,729,012 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 போலியான சொத்துக்கள்

பௌதீக ரீதியில் சபை வசம் காணப்படாத ரூபா 83,385 தொகையான இருப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 943,316 தொகையான 10 கணக்கு விடயங்கள் தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 80,070 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 71,186 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 187 | 211 | 209 |
| (ii) | வாடகை | 2,373 | 4,014 | 2,418 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 650 | 511 | 1,014 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,720 | 6,506 | 1,037 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 310,167 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 106,210 |

### 2.2.3 கடைவாடகை

(அ) சபைக்குரிய கடைகளை வாடகைக்குப் பெற்ற வாடகை உரிமையாளர்களினால் 11 கடைகளுக்காக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை பூரணமற்றிருந்தமையினால் ரூபா 756,510 தொகையான அந்த நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/பீஎல்/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தப்பட்ட வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் அது கருத்திற் கொள்ளப்படாது சபைக்குச்

சொந்தமான கடைகள் 10 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தன.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட பின்வரும் வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை வளவில் துருப்பிடித்துக் காணப்பட்டன.

| வாகன இலக்கம் | விபரம் | செயற்பாடற்றுக் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|
| 78 - 0159 | கை டெரக்ரர் | 2008 இற்கு முன்பிலிருந்து |
| 53 - 5040 | கப் வாகனம் | 2008 இற்கு முன்பிலிருந்து |
| 252 - 6536 | கப் வாகனம் | 2011 இற்கு முன்பிலிருந்து |
| பதிவு செய்யப்படாதது | கை டெக்ரர் | 2008 இற்கு முன்பிலிருந்து |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இக்டாட் வெளியீட்டு பிரசுரத்தின் எஸ்சீஏ/1 ஆம் இலக்க ஒப்பந்த வேலைகள் நிபந்தனைக் கோவையின் 56 ஆம் பந்தியின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளுக்கான அளவிடைகளைப் பெற்று அந்த அளவிடையின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவுகள் செய்ய வேண்டியிருந்ததுடன் இயந்திர மணியை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாது உத்தேச பஸ் நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதி நிர்மாண வேலைகளுக்காக நிலத்தினைத் தயார் படுத்துவதற்காக அளவிடைகளைப் பெறாமல் 10 இயந்திர மணிக்காக 2011 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 42,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறனின்மை

முன்னோக்கிய வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்